بسم اللہ الرحمن الرحیم — نحمدہ ونصلی علیٰ رسولہ الکریم — وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 32

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

15 துல்ஹஜ்ஜா 1441 ஹிஜ்ரி கமரி 06 ஸஹூர் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
06 ஆகஸ்ட் 2020


## அல்லாஹ்வின் கட்டளை

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَاْكُلُوْٓا اَمْوَالَكُمْ بَيْنَكُمْ بِالْبَاطِلِ اِلَّآ اَنْ تَكُوْنَ تِجَارَةً عَنْ تَرَاضٍ مِّنْكُمْ ۚ وَلَا تَقْتُلُوْٓا اَنْفُسَكُمْ ۗ اِنَّ اللّٰهَ كَانَ بِكُمْ رَحِيْمًا

நம்பிக்கையாளர்களே! நீங்கள் உங்களுக்கிடையில் ஒத்துக்கொண்ட வாணிகத்தின் மூலமாக உங்கள் பொருளை ஒருவருக்கொருவர் தவறான முறையில் விழுங்காதீர்கள். நீங்கள் உங்களையே கொலை செய்யாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு மேன்மேலும் கருணை செய்பனாவான். (4:30)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நினைவில் கொள்ளுங்கள். இறைவனிடத்தில் மனிதனது வாழ்க்கை பதிவேடு இருப்பது உண்மையாகும். அதில் என்ன என்ன எழுதுப்பட்டுள்ளது என்பது அவருக்கு என்ன தெரியும். எனவே உள்ளத்தை எப்போதும் விழிப்புடன் வைத்திருக்க வேண்டும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எனது கண்களின் குளிர்ச்சி தொழுகையில் இருக்கின்றது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் இதனையும் நினைவில் கொள்ளுங்கள். அதாவது நிர்ணயிக்கப்பட்டுள்ள ஐவேளை தொழுகையானது நிர்பந்தப்படுத்துவதற்காக அல்ல; மாறாக, இதைப் பற்றி சிந்தித்தால் இது உண்மையில், ஆன்மீக நிலைமைகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு பிம்பமாக இருக்கின்றது என்பது தெரிய வரும்.

அல்லாஹ் கூறுகின்றான்:

اَقِمِ الصَّلٰوةَ لِدُلُوْكِ الشَّمْسِ

அதாவது தொழுகையினை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுவீராக. (17:79)

### 14 ஜனவரி 1898
### மறுமையை கருத்தில் கொள்ளுங்கள்

அன்னார் கூறினார்கள்: மறுமையை கருத்தில் கொள்வது மக்கள் மீது கடமையாகும். தண்டனை வருவதற்கு முன்பு அஞ்ச வேண்டும். லூத் போன்ற சமுதாயங்களின் முடிவு என்னவாயிற்று என்று பாருங்கள். ஒவ்வொருவர் மீதும் கடமை என்னவென்றால், உள்ளம் கடுமையாக இருப்பினும் அதற்கு பணி மற்றும் உருக்கத்தின் பாடத்தை புகட்ட வேண்டும். இது நமது ஜமாஅத்திற்கு மிகவும் முக்கியமாகும். ஏனென்றால் அவருக்கு புத்தம் புதிய இறைஞானம் கிடைக்கின்றது. இறைஞானம் பெற வேண்டும் என்று ஒருவர் வாதம் செய்து அதன்படி செயல்படவில்லை என்றால் பிறகு அது வெறும் வெற்று வாதமே ஆகும்.

எனவே நமது ஜமாஅத், மற்றவர்கள் கவனமற்றவர்களாக இருப்பதைப் பார்த்து தாமும் கவனமற்றவர்களாக இருந்து விட வேண்டாம். மேலும் அவர்களது அன்பு குளிர்ந்து விட்டதைக்கண்டு தனது அன்பை குளிர்ந்து விடச் செய்து விட வேண்டாம்.

மனிதன் எண்ணற்ற ஆசைகளை கொண்டிருக்கின்றான். மறைவானவற்றின் நியதியைப் பற்றி எவருக்குத் தெரியும். வாழ்க்கை நமது விருப்பத்திற்கேற்ப ஒருபோதும் அமையாது. விருப்பத்தின் தொடர்பு என்பது வேறு; இறைநியதியின் தொடர் என்பது வேறு. மேலும் இந்த தொடரே உண்மையானதாகும்.

நினைவில் கொள்ளுங்கள். இறைவனிடத்தில் மனிதனது வாழ்க்கை பதிவேடு இருப்பது உண்மையாகும். அதில் என்ன என்ன எழுதுப்பட்டுள்ளது என்பது அவருக்கு என்ன தெரியும். எனவே உள்ளத்தை எப்போதும் விழிப்புடன் வைத்திருக்க வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், பொதுவான கஷ்டங்கள் வருவதால் மக்களின் ஆணவம் நீங்கவில்லை. நான் உண்மையிலேயே கூறுகின்றேன். உண்மையிலேயே மக்களின் பிடிவாதமும், ஆணவமும் நீங்கவில்லையோ அப்போது வரை இது நீங்கவும் செய்யாது. நான் பார்க்கின்றேன். அதாவது இறைவனிடம் முழுமையாக சமாதானம் செய்து கொள்ள மக்கள் ஆயத்தமாக இல்லை. பஞ்சத்தின் காலகட்டத்தில் மக்கள் உணரவில்லை. ஆரம்ப காலத்தில் மக்கா மற்றும் மதீனாவின் ஃபத்வாக்களும் அச்சமூட்டி வந்தது.

எவராவது ஒருவர் மக்காவிலிருந்து ஃபத்வா வந்துள்ளது என்று கூறினால் மக்கள் அச்சமடைவர். ஆனால் இப்போது இந்த கஷ்டங்களைப் பார்த்த பிறறும் கூட மக்கள் அஞ்சுவதில்லை.

எனது கருத்து என்னவென்றால், எப்போது வரை மனிதன் முழுமையான முறையில் (இறைவன் முன்) குனிய மாட்டானோ அப்போது வரை தக்தீரும் மாறாது.

اِنَّ اللّٰهَ لَا يُغَيِّرُ مَا بِقَوْمٍ حَتّٰى يُغَيِّرُوْا مَا بِاَنْفُسِهِمْ ؕ

எந்தச் சமுதாயத்தினரும் தங்கள் அகநிலையை மாற்றிக் கொள்ளாதவரை அல்லாஹ் ஒருபோதும் அவர்களின் நிலையினை மாற்றுவதில்லை. (13:12)

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 128,129 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**Love for All Hatred for None**
**எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு**

**நேர்மையை நேசிப்போம்**
**நேர்மையின்மையை வெறுப்போம்**


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**யா ரஸூலல்லாஹ் (ஸல்)! நாங்கள் உங்களுக்கு வலப் புறம் நின்றும் போரிடுவோம்; இடப் புறமும் நின்றும் போரிடுவோம்; முன் நின்றும் போரிடுவோம்; பின் நின்றும் போரிடுவோம். எதிரிகள் எங்களை கொன்று குவித்து எங்களது பிணங்களை தாண்டாத வரை தங்களை வந்தடைய முடியாது**

**பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியும், இஸ்லாத்தின் தோற்றுனர் (ஸல்) அவர்களின் மிகவும் நேசத்திற்குரியவரும், மிகவும் கலப்பற்ற, பற்றுணர்வுமிக்க மற்றும் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வே! அன்ஸார்கள் மீது கருணை காட்டுவாயாக. மேலும் அன்ஸார்களின் பிள்ளைகளின் மீது கருணை காட்டுவாயாக**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 03 ஜுலை 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **03 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ- اَلرَّحْمٰنِ الرَّحِيمِ- مٰلِكِ يَوْمِ الدِّينِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ- صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ

கடந்த குத்பாக்களில் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பு கூறப்பட்டு வந்தது. பத்ர் போரின் ஒரு சம்பவமாக நன்றியுணர்வு உடன்படிக்கையின் வெளிப்பாட்டைப் பற்றி கடந்த குத்பாவில் கூறப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தன்னுடைய வழக்கில் இவ்வாறு அன்னார் கூறுகின்றார்கள்:

இயற்கையான விஷயம் என்னவென்றால், எங்கு நேசம் இருக்குமோ அங்கு தனது அன்பருக்கு துன்பம் ஏற்படுவதை எந்த நபரும் விரும்ப மாட்டார். மேலும் தனது நேசர் போருக்கு செல்வதை எவரும் விரும்ப மாட்டார். இன்னும் சொல்லப்போனால், தனது நேசர் போர் மைதானத்திலிருந்து விலகியிருக்க வேண்டும் என்பதற்காக இயன்ற அனைத்து முயற்சிகளையும் செய்வார்.

இதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போரில் பங்கு பெறுவதை சஹாபாக்கள் யாரும் விரும்பவில்லை. ஆயினும் தாங்கள் போருக்கு செல்வதை சஹாபாக்கள் விரும்பியிருந்தனர். மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போருக்கு செல்வதுதான் அவர்களுக்கு விருப்பமற்ற ஒன்றாக இருந்தது. தான் நேசிக்கின்ற ஒவ்வொருவர் மீதும் அனைவருக்கும் இருக்கும் இயல்பான ஆசையாகும் இது.

அதுமட்டுமின்றி நாம் பார்க்கின்றோம். வரலாற்றில் இதற்கு போதுமான சான்றுகள் கிடைக்கின்றன. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் மைதானத்தை அடைந்தபோது அன்னார் சஹாபாக்களிடம், நாம் வணிகக்குழுவை எதிர்கொள்ளப் போவதில்லை. மாறாக, படையை எதிர்கொள்ள இருக்கின்றோம் என்று இறைவன் தனக்கு அறிவித்துள்ளான் என்றும் கூறினார்கள்.

பின்னர் அன்னார் அவர்களிடம் ஆலோசனை கேட்டார்கள். மேலும் உங்களது ஆலோசனை என்ன? என்று எனக்கு கூறுங்கள் என்றும் கூறினார்கள்.

அன்னாரின் இந்த கூற்றை சஹாபாக்கள் கேட்டவுடன் ஒவ்வொருவராக எழுந்து நின்று மிகவும் உயிர் அர்ப்பணிக்கும் உணர்வில் நிறைந்த சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். மேலும் நாங்கள் அனைத்து தொண்டுகளுக்கும் ஆயத்தமாக இருக்கின்றோம் என்றும் கூறினார்கள். ஒருவர் எழுந்து சொற்பொழிவாற்றி அமர்ந்து விடுவார். பிறகு மற்றொருவர் எழுந்து ஆலோசனை வழங்கி அமர்ந்து விடுவார். ஆயினும் எனக்கு ஆலோசனை வழங்குங்கள் என்றே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறி வந்தார்கள்.

அதற்கு காரணம் என்னவென்றால், அதுவரை யாரெல்லாம் எழுந்து நின்று சொற்பொழிவு நிகழ்த்தினார்களோ அந்த சஹாபாக்கள் அனைவரும் முஹாஜிரீன்களைச் சார்ந்வர்களாகவே இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனக்கு ஆலோசனை வழங்குங்கள் என்று மீண்டும் மீண்டும் கூறி வந்தார்கள். அப்போது அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணத்தை புரிந்து கொண்டார்கள்.

மேலும் அன்ஸார்கள் சார்பாக எழுந்து நின்று கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! உங்களுக்கு முன்னால் ஆலோசனைகள் கூறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் எனக்கு ஆலோசனை வழங்குங்கள் என்று தாங்கள் மீண்டும் மீண்டும் கூறிக் கொண்டிருக்கின்றீர்கள். இதிலிருந்து எங்களுக்கு தெரிய வருவது என்னவென்றால், தாங்கள் அன்ஸார்களின் கருத்தையே அறிய விரும்புகின்றீர்கள். நாங்கள் இதுவரை மௌனமாக இருந்தோம் என்றால் அதற்கு காரணம், நாங்கள் போர் புரிவதை வழிமொழிந்தால் ஒருவேளை முஹாஜிரீன்கள் இவ்வாறு புரிந்து கொள்ளலாம். அதாவது இவர்கள் எங்களது சமுதாயம் மற்றும் எங்களது சகோதரர்களுடன் போரிட்டு அவர்களை கொல்ல விரும்புகின்றார்கள்.

பின்னர் அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஒருவேளை பைஅத்தே அக்பா சந்தர்ப்பத்தின்போது செய்யப்பட்ட உடன்படிக்கையை பற்றி தாங்கள் எண்ணலாம். ஆனால் அதில் எங்கள் சார்பாக இந்த நிபந்தனை முன் வைக்கப்பட்டிருந்தது. அதாவது எதிரி மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்தால் அந்நிலையில் நாங்கள் நிச்சயமாக அதை எதிர்கொள்வோம். ஆனால் மதீனாவை விட்டு வெளியேறிச் சென்று போரிட நேரிட்டால் அந்நிலையில் நாங்கள் அதற்கு பொறுப்பாக மாட்டோம். இதை நீங்கள் எண்ணுகின்றீர்களா? என்று அந்த சஹாபி கேட்டார்கள். அதற்கு ஆம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் மதீனாவிற்கு வருகை தந்தபோது தங்களின் உயர் அந்தஸ்து, மேன்மை மற்றும்

தகுதியை நாங்கள் அறிந்திருக்கவில்லை. ஆனால் நாங்கள் தற்போது எங்கள் கண்களால் உங்களின் உண்மைத்துவத்தை கண்டு விட்டோம். இப்போது அந்த உடன்படிக்கைக்கு எங்களது பார்வையில் எந்த பொருளும் கிடையாது.

அதாவது பைஅத்தே உக்பா சந்தர்ப்பத்தின்போது செய்யப்பட்ட அந்த உடன்படிக்கையானது உலகியல் ரீதியிலான ஒரு சாதாரண உடன்படிக்கையாக இருந்தது. தற்போது நாங்கள் கண்டு கொண்டோம். எங்களது ஆன்மீக கண்கள் திறந்து விட்டன. அதன் பிறகு அதற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. தாங்கள் எங்கு சென்றாலும் நாங்கள் உங்களுடன் இருப்போம்.

இறைவன் மீது ஆணையாக! நீங்கள் எங்களை கடலில் குதிக்கும்படி கட்டளையிட்டால் நாங்கள் குதித்து விடுவோம். மேலும் எங்களில் ஒரு நபர் கூட பின்தங்கி இருக்க மாட்டார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் உங்களுக்கு முன் நின்றும் போரிடுவோம்; பின் நின்றும் போரிடுவோம்; தங்களின் வலப் புறமிருந்தும் போரிடுவோம்; இடப் புறமிருந்தும் போரிடுவோம். எங்களைக் கொன்று குவித்து எங்களின் பிணங்களைத்தாண்டிதான் எதிரி உங்களை வந்தடைய முடியும்.

(ஏக் ஆயத் கி புர் மஆருஃப் தஃப்ஸீர், அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 620–621)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ரஅது அதிகாரத்தின் 12 வது வசனத்தின் விளக்கமாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

வசனத்தின் ஆரம்பத்தில் இவ்வாறு வருகிறது.

لَهٗ مُعَقِّبٰتٌ مِّنۡۢ بَيۡنِ يَدَيۡهِ وَمِنۡ خَلۡفِهٖ يَحۡفَظُوۡنَهٗ مِنۡ اَمۡرِ اللّٰهِ

அதாவது அவருக்கு முன்பும் பின்பும் செல்லக்ககூடிய பாதுகாவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன் விளக்கவுரை இவ்வாறாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழு நபித்துவ காலமும் இந்த பாதுகாப்பிற்கான சான்றாகும். அந்த வாக்குறுதியை அல்லாஹ் வழங்கியிருந்தான். அதாவது நாம் அவருக்கு முன்பும் பின்பும் பாதுகாவலர்களை நியமித்திருக்கின்றோம் என்பது வாக்குறுதியாகும்.

எனவே மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வானவர்களே பாதுகாத்து வந்தார்கள். அவ்வாறில்லை என்றால் இந்த அளவுக்கு பகைவர்களால் அன்னார் சூழப்பட்டிருந்தும் அன்னாரின் உயிர் எவ்வாறு பாதுகாப்பாக இருந்திருக்க முடியும்? ஆயினும் மதீனா வருகை தந்த உடன் இரண்டு வகையான பாதுகாப்பும் அன்னாருக்கு கிடைத்திருந்தது. விண்ணின் வானவர்களின் பாதுகாப்பும், மண்ணின் வானவர்களின் அதாவது சஹாபாக்களின் பாதுகாப்பும் அன்னாருக்கு கிடைத்திருந்தது. பத்ர் போர் அந்த வெளிப்படையான மற்றும் மறைவான பாதுகாப்பிற்கு மிகவும் அழகிய உதாரணமாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்து விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனத்துவாசிகளுடன் இவ்வாறு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதாவது அன்னார் மக்காவை விட்டு வெளியே சென்று போரிட்டால் அப்போது மதீனத்துவாசிகளுக்கு அன்னாருக்கு உதவி புரிந்தாக வேண்டும் என்ற எந்த நிர்பந்தமும் இருக்காது. பத்ர் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸார் மற்றும் முஹாஜிரீன்களிடம் போர் செய்வது தொடர்பாக ஆலோசனை கேட்டார்கள். முஹாஜிரீன்கள் மீண்டும் மீண்டும் எழுந்து நின்று, போரின் மீது அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆயினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் கூற்றை செவிமடுத்த பிறகும் மக்களே எனக்கு ஆலோசனை வழங்குங்கள் என்று கூறிக் கொண்டே இருந்தார்கள்.

அப்போது ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) என்ற ஓர் அன்ஸாரி சஹாபி, ஹுஸூர் (ஸல்) அவர்களே! நீங்கள் எங்களது கருத்தை எதிர்பார்க்கின்றீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு ஹுஸூர் (ஸல்) அவர்கள், ஆம் என்று கூறினார்கள். அப்போது அவர் கூறினார்: நிச்சயமாக நாங்கள் இவ்வாறு உடன்படிக்கை செய்திருந்தோம். அதாவது வெளியில் சென்று போரிட நேர்ந்தால் தங்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்ற எந்த நிர்பந்தமும் எங்களுக்கு இருக்காது என்று தங்களுடன் நாங்கள் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தோம்.

ஆனால் அந்த காலம் வேறொரு காலமாகும். இப்போது நாங்கள் தங்களை கண்டு விட்டோம். அல்லாஹ்வின் தூதராகிய தாங்கள் உண்மையில் இருக்கின்றீர்கள் என்பதை நாங்கள் கண்டு கொண்ட பிறகு இனி ஆலோசனைக்கான என்ன தேவை உள்ளது.

தாங்கள் எங்களுக்கு கட்டளையிட்டால் நாங்கள் எங்களது குதிரைகளை கடலில் வீசி விடுவோம். தாங்கள் நீரும், உமது இறைவனும் சென்று போரிடும். நாங்கள் இங்கேயே அமர்ந்து கொள்கின்றோம் என்று மூஸாவின் சமுதாயம் கூறியதுபோன்று ஒருபோதும் நாங்கள் கூற மாட்டோம். மாறாக, நாங்கள் ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு வலப் புறம் நின்றும் போரிடுவோம்; இடப் புறமும் நின்றும் போரிடுவோம்; முன் நின்றும் போரிடுவோம்; பின் நின்றும் போரிடுவோம். எதிரிகள் எங்களை கொன்று குவித்து எங்களது பிணங்களை தாண்டாத வரை தங்களை வந்தடைய முடியாது என்று அன்னார் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த அந்த முஃகிபாத்தைச் சார்ந்தவர்களாக அதாவது பாதுகாவலர்களைச் சார்ந்தவர்களாக எனது பார்வையில் இந்த சஹாபாக்கள் திகழ்ந்தனர்.

ஒரு சஹாபி கூறுகின்றார். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து 13 போர்களில் பங்கு பெற்றிருக்கின்றேன். ஆயினும் எனது உள்ளத்தில் மீண்டும் மீண்டும் இந்த ஆசை பிறந்த வண்ணம் உள்ளது. அதாவது நான் இந்தப் போர்களில் பங்கு பெறுவதற்கு பகரமாக ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களின் வாயிலிருந்து வெளியேறிய வார்த்தைகள் என்னுடைய வாயிலிருந்து வெளியேறி இருக்க வேண்டுமே என்று எண்ணி வருகின்றேன். அதாவது தனது நன்றி விசுவாசத்திற்குரிய அந்த வாக்கியங்கள் எனது வாயிலிருந்து வந்திருக்கக்கூடாதா?

பத்ர் போர் சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களின் கலப்பற்ற தன்மையை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

எந்த இடத்தில் இஸ்லாமிய படைகள் தங்கியிருந்தனவோ அந்த இடம் போர் ரீதியில் நல்ல இடமாக இருந்திருக்கவில்லை. அப்போது ஹப்பாப் பின் முன்ஸிர் என்ற சஹாபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, தாங்கள் இறை இல்ஹாமிற்கேற்பதான் இந்த இடத்தை தேர்ந்தெடுக்கின்றீர்களா? அல்லது போர் படை திட்டங்களின் அடிப்படையில் மட்டுமே இந்த இடத்தை தேர்ந்தெடுத்திருக்கின்றீர்களா? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இது தொடர்பாக எந்த இறை

கட்டளையும் இல்லை. நீங்கள் ஏதேனும் ஆலோசனை கூற விரும்பினால் கூறுங்கள் என்று கூறினார்கள்.

அப்போது ஹப்பாப் கூறினார்கள்: என்னைப் பொறுத்தவரை இந்த இடம் நல்ல போர் ரீதியில் நல்ல இடம் அல்ல. நாம் முன்னேறிச் சென்று குரைஷிகளுக்கு அருகில் மிக நெருக்கமான நீரூற்று ஒன்று உள்ளது. அதை நாம் கைப்பற்றிக் கொள்வது சிறந்ததாக இருக்கும். எனக்கு அந்த நீரூற்றைப் பற்றி தெரியும். அதில் போதுமான அளவு தண்ணீர் உள்ளது என்று கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஆலோசனையை விரும்பினார்கள். பொதுவாக அதுவரை குரைஷிகள் மணல் மேட்டிலேயே தங்கியிருந்தார்கள். மேலும் இந்த நீரூற்று காலியாக இருந்தது. முஸ்லிம்கள் முன்னேறிச் சென்று அந்த நீரூற்றை கைப்பற்றிக் கொண்டார்கள். ஆயினும் திருக்குர்ஆனில் இதைப் பற்றிய சைகையான குறிப்பு காணப்படுகின்றது. அப்போது அந்த நீரூற்றில் அதிக அளவிலான தண்ணீர் கிடையாது. முஸ்லிம்களுக்கு தண்ணீர் தட்டுப்பாட்டிற்கான உணர்வும் ஏற்பட்டது.

அதுமட்டுமல்ல, முஸ்லிம்கள் எந்த இடத்தில் தங்கி இருந்தார்களோ அந்த இடமும் நல்ல இடமாக இருக்கவில்லை. ஏனென்றால் அந்த பக்கம் மணல் அதிகமாக இருந்தது. அதன் காரணமாக அவர்களின் கால்கள் பூமியில் நல்ல முறையில் நிலைபெற முடியாமல் இருந்தது. இடத்தைத் தேர்ந்தெடுத்த பிறகு அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களின் ஆலோசனையுடன் சஹாபாக்கள் மைதானத்தின் ஒரு பகுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக கூடாரம் ஒன்றை அமைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சவாரிகளை நிழலில் கொண்டு சென்று கட்டினார்கள்.

மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் இந்த கூடாரத்தில் அமர்ந்திருங்கள். மேலும் நாங்கள் அல்லாஹ் மற்றும் அல்லாஹ்வின் தூதரின் பெயரைக் கூறி எதிரிகளுடன் போர் செய்கின்றோம். ஒருவேளை இறைவன் எங்களுக்கு வெற்றியை வழங்கி விட்டால், எங்களது ஆசையும் இதுதான். அல்ஹம்துலில்லாஹ். ஆனால் ஒருவேளை துரதிர்ஷ்டவசமாக நிலைமை மேசமாகி விட்டால் தாங்கள் தங்களின் இந்த சவாரியின் மீது அமர்ந்து எப்படியாவது மதீனாவை சென்றடைந்து விடுங்கள். அந்த கூடாரத்துடன் அழகிய சவாரி ஒன்றை இன்னும் சொல்வதென்றால் நல்ல ஒட்டகம் ஒன்றை அன்னார் கட்டி வைத்திருந்தார்கள்.

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: தாங்கள் மதீனாவை சென்றடைந்து விடுங்கள். அங்கு அன்பிலும் கலப்பற்றத் தன்மையிலும் எங்களை விட எங்களுக்கு சலைக்காத எங்களது சகோதரர்கள் உள்ளனர். அவர்களுக்கு இந்த திட்டத்தில் போரிட நேரிடும் என்பதை எண்ணியிருக்கவில்லை. அதனால்தான் அவர்கள் போரிட வரவில்லை. இல்லையென்றால் அவர்கள் பின்தங்கி இருந்திக்க மாட்டார்கள். ஆயினும் அவர்கள் நிலைமையை அறிகின்றபோது தங்களைப் பாதுகாப்பதற்காக தமது உயிரையும் அர்ப்பணித்து போரிடுவதிலிருந்து அவர்கள் விலகியிருக்க மாட்டார்கள்.

இதுவே ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களின் உணர்வும், கலப்பற்றத் தன்மையாகவும் இருந்தது. இது எல்லா நிலையிலும் போற்றப்பட வேண்டியதாகும்.

இறைவனுடைய தூதர் மைதானத்திலிருந்து புறமுதுகு காட்டுவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் அணியில் நின்று வந்தார்கள். எனவே ஹுனைன் போரின்போது நாம் பார்க்கின்றோம். 12000 போர் படை வீரர்கள் புறமுதுகு காட்டினார்கள். ஆனால் ஏகத்துவத்தின் தலைமையகமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்கள் தடுமாற்றம் அடையவில்லை.

எவ்வாறிருப்பினும் அன்னாருக்கு கூடாரம் அமைக்கப்பட்டது. ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

மேலும் சஅத் மற்றும் வேறு சில அன்ஸார்கள் பாதுகாப்பு கொடுப்பதற்காக அங்கு நின்று கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த கூடாரத்திலேயே இரவைக் கழித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரவு முழுவதும் மன்றாடி துஆ செய்தார்கள். முழு படையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மட்டும்தான் இரவு முழுவதும் விழித்திருந்தார்கள். மற்றவர்கள் அனைவரும் மாறி மாறி தூங்கினார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 356,357)

உஹது போர் சந்தர்ப்பத்தின்போது ஜுமுஆ நாளன்று ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உஸைது பின் ஹுலைர் மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) ஆகியோர் மஸ்ஜிது நபவியில் ஆயுதங்களை ஏந்திக்கொண்டு வாசலுக்கு அருகில் நின்று கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

உஹது போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குதிரையின் மீது அமர்ந்து வில்லை தோளில் போட்டுக் கொண்டு ஈட்டியை கையில் ஏந்திக் கொண்டு மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். அப்போது இரண்டு சஅதுகளும் அதாவது ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஒடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் போர் கவசனங்களை அணிந்திருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 2 பக்கம் 28–30 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் உஹது போரைப் பற்றி குறிப்பிட்டவாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பெரும் ஜமாத்துடன் அஸர் தொழுகைக்குப் பிறகு மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவர்களான ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) மற்றும் சஅத் பின் உபாதா (ரலி) ஆகியோர் அன்னாரின் சவாரிக்கு முன்பு மெது மெதுவாக ஒடிக் கொண்டிருந்தார்கள். ஏனைய சஹாபாக்கள்

## திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் உம்மைப் பொய்ப்படுத்தினால் நீர் (அவர்களிடம்) கூறுவீராக! என் செயலுக்கு நானே பொறுப்பு. உங்கள் செயலுக்கு நீங்களே. நான் செய்கின்ற செயலி(ன் பொறுப்பி)லிருந்து நீங்கள் நீங்கியவர்களாவீர்கள். நீங்கள் செய்கின்ற செயலி(ன் பொறுப்பி)லிருந்து நான் நீங்கியவனாவேன். (10:42)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

அன்னாரின் வலப் பக்கமும், இடப் பக்கமும், பின் புறமும் சென்று கொண்டிருந்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 486)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது போரிலிருந்து மதீனா திரும்பி வந்தார்கள். மேலும் தனது குதிரையிலிருந்து கீழே இறங்கினார்கள். அப்போது அன்னார் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) ஆகியோரின் உதவியுடன் தனது வீட்டில் நுழைந்தார்கள்.

(சபலுல் ஹுதா வர் ரிஷாத் தொகுதி 4 பக்கம் 229 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களின் தாயாருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவுக்கு அன்பு இருந்தது என்பதை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

உஹது போரிலிருந்து திரும்பும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சவாரியின் சாட்டையை ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள் மிகப் பெருமிதத்துடன் பிடித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். போரில் அன்னாரின் சகோதரரும் கொலை செய்யப்பட்டிருந்தார். மதீனாவிற்கு அருகில் வந்து சேர்ந்ததும் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள் தனது தாயார் வருவதைக் கண்ட பிறகு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாயார் வந்து கொண்டிருக்கின்றார் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களின் தாயாரின் வயது அப்போது 80,82 ஆக இருந்தது. கண்ணின் பார்வை மறைந்திருந்தது. பலவீனமான பார்வையே இருந்தது. வெளிச்சத்திலும் நிழலிலும் கஷ்டப்பட்டு பார்வை தென்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டதாக மதீனாவில் செய்து பரவி இருந்தது. இந்த விஷயத்தை செவியுற்று அந்த கிழவியும் தள்ளாடியவாறு மதீனாவிலிருந்து வெளியேறி வந்திருந்தார். ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள், எனது தாயார் வந்து கொண்டிருக்கின்றார் என்று கூறியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனது சவாரியை நிறுத்துங்கள் என்று கூறினார்கள். உங்களது தாயார் வந்து கொண்டிருக்கின்றார். எனவே அவர்களுக்கு அருகில் சென்று ஒட்டகத்தை நிறுத்துங்கள் என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த வயதான பெண்ணிற்கு அருகில் வந்ததும் அந்த பெண்மணி தனது மகன்களைப் பற்றி எந்த செய்தியும் விசாரிக்கவில்லை. அவர்கள் கேட்டது ஒன்றே ஒன்றுதான். அது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்கே இருக்கின்றார்கள்? என்று கேட்டார். அதற்கு ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள், தங்களுக்கு முன்னால் இருக்கின்றார்கள் என்று கூறினார்கள். அந்த முதிய பெண்மணி பார்வையை உயர்தினார்கள். அவரது பலவீனமான பார்வை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தின் மீது பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தாயே! உங்களது இளம் மகன் இந்தப் போரில் ஷஹீதாகி விட்டார். எனக்கு வேதனையாக உள்ளது என்று கூறினார்கள்.

முதுமைப் பருவத்தில் ஒருவர் இதுபோன்ற செய்தியை கேட்டால் அவர் நிலை தடுமாறி விடுவார். ஆனால் அந்த கிழவியோ எவ்வளவு அன்பு நிறைந்த வார்த்தைகளில் பதிலளித்தார் பாருங்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் என்ன கூறிக் கொண்டிருக்கின்றீர்கள்? எனக்கு தங்களின் நலத்தைப் பற்றி மட்டுமே கவலை இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தைப் பற்றி எடுத்துரைத்தார்கள். அதன் பிறகு அன்னார் பெண்களை நோக்கி கூறினார்கள்: அஹ்மதி பெண்களுக்கு தப்லீக் கடமையின் பக்கம் கவனமூட்டியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

அந்த பெண்கள்தான் இஸ்லாத்தை பரப்புவதிலும், தப்லீக் பணியிலும் ஆண்களின் தோளோடு தோள் நின்றார்கள். இந்த பெண்களின் தியாகங்கள் மீது இஸ்லாமிய உலகம் பெருமிதம் கொள்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பெண்களாகிய நீங்களும் வாதம் செய்கின்றீர்கள். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றோம். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிழல் வடிவமாக இருக்கின்றார்கள் என்று நீங்கள் வாதிடுகின்றீர்கள்.

எனவே ஒரு வகையில் நீங்களும் பெண் சஹாபிகளின் நிழல் வடிவம் ஆவீர்கள். ஆனால் நீங்கள் சரியாக கூறுங்கள். அந்த பெண் சஹாபிகளிடம் இருந்த அதே மார்க்க உணர்வு உங்களிடமும் உள்ளதா? அந்த பெண் சஹாபிகளிடமிருந்த அதே ஒளி உங்களிடமும் உள்ளதா? அந்த பெண் சஹாபிகளின் சந்ததிகள் நல்லவர்களாக இருந்ததுபோன்று உங்களின் சந்ததிகளும் இருக்கின்றனரா? என்று எனக்குக் கூறுங்கள்.

நீங்கள் ஆய்வு செய்து பார்த்தால், அந்த பெண் சஹாபிகளிடமிருந்து நீங்கள் உங்களை வெகு தொலைவில் காண்பீர்கள். அந்த பெண் சஹாபிகள் செய்த அந்த தியாங்களுக்கு நிகரான தியாகம் இன்று வரை உலகில் இல்லை. அவர்கள் தங்களது உயிரை துச்சமாக கருதி தியாகங்களை செய்தனர். அது அல்லாஹ்வுக்கு எவ்வளவு விருப்பத்திற்குரியதாக இருந்ததென்றால் அதன் காரணமாக அல்லாஹ் விரைவாக அவர்களுக்கு வெற்றியை வழங்கி விட்டான். மற்ற சமுதாயங்கள் எந்த பணியை நூற்றாண்டுகளில் செய்ய முடியாதோ அதை அந்த சஹாபாக்களும், பெண் சஹாபிகளும் சில ஆண்டுகளுக்குள்ளேயே செய்து காட்டி விட்டனர்.

(ஃபரீஸா தப்லீக் அவ்ர் அஹ்மதி ஹவாதீன், அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 400,401)

இங்கு அஹ்மதி பெண்களிடம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் உரையாற்றிக் கொண்டிருந்தார்கள். எனவே அவர்களைப் பற்றி கூறப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் எப்போதும் கலீஃபாக்கள் கூறி வந்துள்ளார்கள். நானும் பல முறை கூறிவிட்டேன். நமது ஆண்களும் அதேபோன்ற முன்னுதாரணங்களை வெளிப்படுத்திக்காட்ட வேண்டும். அப்போதுதான் நமது வாதம் சரியானதாக இருக்க முடியும். உலகில் நாங்கள் இஸ்லாத்தை பரப்பி விடுவோம். மேலும் உலகத்தை இஸ்லாத்தின் கொடியின் கீழ்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நிச்சயமாக அல்லாஹ் சிறிதளவும் மக்களுக்கு அநிதி இழைப்பதில்ல. மாறாக, மக்கள் தமக்குத்தாமே அநீதி இழைத்துக் கொள்கின்றனர். (10:38)

A.Nasir Ahmad (மேலப்பாளையம்)

கொண்டு வருவோம் என்ற உங்களது வாதத்தின்படி நீங்கள் அமல் செய்பவர்களாக இருக்க முடியும். சஹாபாக்கள் நம்முன்னால் நிலைநாட்டியுள்ள அந்த முன்னுதாரணங்களுக்கேற்ப நமது தியாகங்களும், நமது செயல்களும் இருக்கும்போதுதான் நாம் நமது வாதத்தில் வெற்றி பெற முடியும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: கிறிஸ்தவ உலகிம் மகதல மர்யம் மற்றும் அவருடைய தோழிகளின் வீரத்தின் மீது மகிழ்ச்சி கொள்கின்றது. அதாவது அவர்கள் மஸீஹின் கபருக்கு காலை நேரத்தில் எதிரிகளின் பார்வையிலிருந்து மறைந்து சென்றடைந்ததை பெருமிதமாக கருதுகின்றனர். நான் அவர்களிடம் கூறுகின்றேன். வாருங்கள். வந்து எனது நேசரின் கலப்பற்ற மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட சீடர்களைப் பாருங்கள். எப்படிப்பட்ட நிலைமைகளில் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். மேலும் எந்த நிலைமைகளில் அவர்கள் ஏகத்துவத்தின் கொடிகளை உயர்த்திப் பிடித்தார்கள். இதுபோன்ற அர்ப்பணிப்பு உணர்வின் முன்னுதாரணங்கள் உலகில் வேறு எங்கும் இருக்கின்றதா?

மற்றொரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களின் தாயாரின் அதே சம்பவத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மீண்டும் எடுத்துரைக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிர் தியாகிகளை அடக்கம் செய்து விட்டு மதீனா திரும்பினார்கள். அப்போது பெண்களும் குழந்தைகளும் நகரத்தை விட்டு வெளியேறி வரவேற்பதற்காக வந்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகத்தின் சாட்டை மதீனாவின் தலைவர்களில் ஒருவரான ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் பெருமிதத்துடன் முன்னால் ஓடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் உலகிற்கு இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள். பாருங்கள்! நாங்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை நலமுடன் எங்களது வீட்டிற்கு அழைத்து வந்து விட்டோம்.

நகரத்திற்கு வெளியில் அன்னாரின் வயதான தாயாரை அன்னார் கண்டார்கள். அந்த பெண்மணியின் பார்வை பலவீனமாக இருந்தது. உஹது போரில் அவரது ஒரு மகன் அம்ர் பின் மஆஸ் கொலை செய்யப்பட்டிருந்தார். தனது தாயாரை கண்டதும் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாயார் வந்து கொண்டிருக்கின்றார்கள் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இறை அருட்களுடன் அவர்கள் வரட்டும் என்று கூறினார்கள். வயதான பெண்மணி முன்னோக்கி வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பார்ப்பதற்காக தனது பலவீனமான பார்வையைக் கொண்டு இங்கும் அங்கும் தேடினார்கள். இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தை அடையாளங்கண்டு கொண்டார்கள். மேலும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களது மகனின் மரணத்தினால் நான் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன் என்று கூறினார்கள். அதற்கு அந்த நல்ல பெண்மணி கூறினார்: ஹுஸூர் (ஸல்) அவர்களே! நான் தங்களை நலமுடன் கண்டு கொண்ட பிறகு எனது துக்கத்தை நான் விழுங்கி விட்டேன்.

எவ்வளவு விநோதமான வார்த்தை பாருங்கள். அன்பின் ஆழமான உணர்வுகளை இந்த வார்த்தைகள் சுட்டிக் காட்டுகின்றன. வேதனை மனிதனை தின்று விடுகின்றது. ஆனால் வயதான பருவத்தில் அவருக்கு ஊன்றுகோலாக இருந்த மகன் இறந்து விடுகின்றான். அந்நிலையில் அத்தகைய பெண் எவ்வளவு வீரத்துடன் கூறுகின்றார். எனது மகனின் மரணத்தின் வேதனை என்னை எப்படி கொல்லும்? முஹம்மது (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கின்றபோது நான் எனது துன்பத்தை விழுங்கி விட்டேன். எனது மகனின் மரணம் என்னைக் கொல்வதற்கு காரணியாக இருக்காது. மாறாக, அல்லாஹ்வின் தூதருக்காக அவன் உயிரை கொடுத்திருக்கின்றான் என்ற எண்ணத்தால் எனது ஆற்றலை அதிகரிப்பதற்கு காரணியாக இருக்கும். மேலும் அது எனது தைரியத்தை வளர்க்கக்கூடியதாக இருக்கும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள், அன்ஸார்களைப் புகழ்ந்தவாறு அவர்களுக்காக துஆவும் செய்வதாறு கூறுகின்றார்கள்: அன்ஸார்களே! எனது உயிர் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும். நீங்கள் எவ்வளவு பெரிய கூலிகளை பெற்று விட்டீர்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 256,257)

கஅப் பின் அஷ்ரஃப் இஸ்லாத்திற்கு எதிராக பகைமையையும் வெறுப்பையும் பரப்பி வந்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக திட்டம் தீட்டினான். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனைக் கொலை செய்வதற்கு தீர்ப்பு வழங்கினார்கள். அதில் அன்ஸார் கோத்திரத்தின் தலைவர் என்ற முறையிலும் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களின் ஆலோசனையையும் பெற்றுக் கொண்டார்கள். அதைப் பற்றிய விளக்கம் அதாவது தண்டனையை நிறைவேற்றிய விதம் மற்றும் கஅப் பின் அஷ்ரஃப் கொலை செய்யப்பட்ட சம்பவம் ஆகியவற்றை நான் இதற்கு முன் சில காலத்திற்கு முன் இரண்டு சஹாபாக்களைப் பற்றிய குறிப்பில் கூறியிருந்தேன்.

(குத்பா ஜுமுஆ 7 டிசம்பர் 2018 அல்ஃபஸல் இன்டர்நேஷனல் 20 டிசம்பர் 2018 மற்றும் 7 பிப்ரவரி 2020 அல்ஃபஸல் இன்டர்நேஷனல் 28 பிப்ரவரி 2020)

இருந்தபோதிலும் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களுடன் தொடர்புடைய அதன் சில பகுதியை இங்கும் கூறி விடுகின்றேன். நானும் சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன். மேலும் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்திலிருந்தும் சிலவற்றை எடுத்துள்ளேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு வந்தார்கள். அப்போது கஅப் பின் அஷ்ரஃபும் மற்ற யூதர்களுடன் இணைந்து இந்த உடன்படிக்கையில் பங்கு பெற்றிருந்தான். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் யூதர்களுக்கிடையில் நட்பும், அமைதியும், ஒன்றுபட்ட பாதுகாப்பும் செயல்படுத்தப்படும் என்ற உடன்படிக்கை தொடர்பாக அதில் எழுதப்பட்டிருந்தது. ஆனால் கஅபின் உள்ளத்தில் பகைமை மற்றும் வெறுப்பின் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. மேலும் அவன் இரகசியமான நடடிவக்கைகள் மற்றும் மறைவான திட்டங்களால்

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் அவர்களெல்லாம் ஒன்று சேர்க்கப்படும் நாளில், அவர்கள் ஒரு நாளின் சிறிது நேரத்தைத் தவிர (இவ்வுலகில்) தங்காததைப் போல் (உணர்வார்கள்; ஒருவரையொருவர் தெரிந்து கொள்வர். அல்லாஹ்வின் சந்திப்பைப் பொய்யாக்கியோர் நிச்சயம் இழப்புக்கு ஆளாவர். மேலும் அவர்கள் நேர்வழி பெற்றவர்களாக இருக்கமாட்டார்கள். (10:46)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுநரை எதிர்க்கத் தொடங்கி இருந்தான்.

எனவே வரலாற்றில் வருகின்றது. கஅப் ஒவ்வொரு ஆண்டும் யூத ஆலிம்களுக்கும், பண்டிதர்களுக்கும் ஏராளமான பொருள் உதவியை செய்து வந்தான். ஒரு நாள் அவன் அந்த பண்டிதர்களை அவர்களின் மார்க்கப் புத்தங்களின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி கேள்வி கேட்டான். இந்த நபர் உண்மையாளரா? உங்களது எண்ணம் என்ன? என்று கேட்டான். வெளிப்படையில் எங்களது வேதங்களில் எவரைப் பற்றி வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளதோ அவரே இந்த நபர் என்று எங்களுக்குத் தெரிகின்றது என்று அவர்கள் கூறினர்.

இஸ்லாத்தின் மீதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் கடும் பகைமை கொண்டிருந்த கஅப் அதைக்கேட்டு மிகவும் சினம் கொண்டான். மேலும் அவர்களை சோம்பேறிகள் என்றும், ஏசிப்பேசியும் அங்கிருந்து சென்று விட்டான். மேலும் அவர்களுக்கு வழங்கி வந்த பொருளாதார உதவிகளை நிறுத்தி விட்டான். அவர்களுக்கு கிடைத்து வந்த பொருளாதார உதவி நின்று விட்டதும் சில காலம் கழிந்து அவர்கள் கஅபிடம் சென்றார்கள்.

மேலும் கூறினார்கள்: நாங்கள் மீண்டும் ஆய்வு செய்து பார்த்தோம். உண்மையில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் எங்களுக்கு வாக்களிக்கப்பட்ட நபியல்ல என்று கூறினார்.

பணத்திற்கு பண்டிதர்கள் விலைபோய் விடுவார்கள். இன்றும் அதே நிலைதான் உள்ளது. எவ்வாறிருப்பினும் யூத ஆலிம்களை அவன் தன்னுடன் இணைத்துக் கொண்டான். இதுவொரு சாதாரண விஷயம்தான். ஆனால் மிக அபாயகரமான விஷயம் என்னவென்றால், பத்ர் போருக்குப் பிறகு அவன் மிகவும் கடுமையான மற்றும் பெரும் குழப்பங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டான். அதன் விளைவாக முஸ்லிம்களுக்கு மிகவும் அபாயகரமான சூழல் ஏற்பட்டிருந்தது. பத்ர் போர் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களுக்கு ஒரு அசாதாரண வெற்றி கிடைத்திருந்தது. குரைஷிய தலைவர்களில் பெரும்பாலார் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

எனவே இனி இந்த புதிய மார்க்கம் அவ்வளவு எளிதாக அழிவதாக தெரியவில்லை என்பதை கஅப் புரிந்து கொண்டான். இந்த மார்க்கம் தானாகவே அழிந்து விடும் என்று அவன் முன்னர் கருதி இருந்தான். ஆனால் தற்போது அந்த மார்க்கம் அழிவதாக தெரியவில்லை. மாறாக, அது பரவிக் கொண்டிருக்கிறது என்பதை அவன் அறிந்து கொண்டான்.

எனவே பத்ர் போருக்குப் பிறகு இஸ்லாத்தை அழிப்பதற்கும், ஒழிப்பதற்கும் அவன் தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் செய்தான். அதில் எந்தக் குறையையும் வைக்கவில்லை. நான் எப்படியாவது இஸ்லாத்தை அழித்தே தீருவேன் என்று அவன் உறுதி பூண்டிருந்தான்.

நான் ஏற்கனவே கூறியிருந்ததுபோன்று பத்ர் போரில் முஸ்லிம்களுக்கு கிடைத்த வெற்றிக்குப் பிறகு அவனது கோபம் கட்டுக்கடங்காமல் போனது. அந்த கோபத்தின் காரணமாக நான் இஸ்லாத்தை அழித்தே தீருவேன் என அவன் முடிவெடுத்திருந்தான். எனவே உடனடியாக பயணத்திற்கு ஆயத்தமாகி மக்காவை சென்றடைந்தான். அங்கு சென்று தனது இனிமையான பேச்சாலும், கவிதைகளின் அழுத்தத்தாலும் குரைஷிகளின் உள்ளங்களில் ஏற்கனவே இருந்த நெருப்பை மூட்டி அதை கொழுந்துவிட்டு எரியச் செய்தான். அவர்களின் உள்ளங்களில் முஸ்லிம்களின் இரத்தத்தை குடிப்பதற்கான தணிக்க முடியாத தாகத்தை ஏற்படுத்தினான். நீங்கள் தோற்று விட்டீர்கள். உங்களது தலைவர்களை அவர்கள் கொன்று விட்டார்கள். இப்போது நீங்கள் சும்மா அமர்ந்து விட்டீர்களே. செல்லுங்கள். சென்று பழிவாங்குங்கள் என்று கூறினான்.

அவர்களும் திரண்டெழுந்தார்கள். அவர்களின் உள்ளங்களில் பழிவாங்கும் உணர்வையும், பகைமையையும் தனது சொற்பொழிவாலும், கவிதையாலும் அவன் நிரப்பினான். கஅபின் இந்த செயலால் அவர்களின் உணர்வுகளில் மின்னல் வேகத்தில் பாதிப்பு ஏற்பட்டது. எனவே அவன் அவர்களை கஅபாவின் முற்றத்திற்கு அழைத்துச் சென்று கஅபாவின் திரைச் சீலையை அவர்களின் கைகளில் கொடுத்து இதன் மீது இவ்வாறு சத்தியம் செய்யுங்கள் என்று கூறினான். அதாவது இஸ்லாத்தையும், இஸ்லாத்தின் தோற்றுநரையும் உலகத்திலிருந்து முற்றிலும் அழித்து விடாதவரை நாங்கள் சும்மா இருக்க மாட்டோம் என்று சத்தியம் செய்ய வைத்தான்.

மக்காவில் இந்த பகைமை உணர்வை உருவாக்கி விட்ட பிறகு அவன் அத்துடன் நின்றுவிடவில்லை. மாறாக, அந்த தீய கயவன் ஏனைய அரபு கோத்திரங்களை நோக்கி சென்றான். பின்னர் ஒவ்வொரு சமுதாயத்திடமும், ஒவ்வொரு கோத்திரத்திடமும் சென்று முஸ்லிம்களுக்கு எதிராக மக்களை கிளர்ந்தெழச் செய்தான். பின்னர் மதீனாவிற்கு திரும்பி வந்து மீண்டும் இஸ்லாத்தை எதிர்க்கின்ற வேலையை வேகப்படுத்தினான். முஸ்லிம் அல்லாதவர்களுக்கு மத்தியில் அவர்களின் உணர்வுகளை தூண்டும் வகையில் கவிதைகளை பாடினான்.

குறிப்பாக யூதர்களிடம் முஸ்லிம்கள் பெண்களுக்கு எதிராக மோசமான மற்றும் ஆபாசமான வழிமுறைகளில் விஷயங்களை கூறினான். எதிர்ப்பின் நெருப்பை மூட்டுகின்ற இந்த வேலையுடன் அவன் நின்றுவிடவில்லை. மாறாக, இறுதியில் அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு அவன் சதித்திட்டங்களை தீட்டினான். முயற்சி செய்தான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விருந்த என்ற சாக்குப்போக்கில் தனது வீட்டிற்கு அழைத்தான். சில யூத இளைஞர்களின் மூலம் அன்னாரை கொலை செய்வதவற்கு அவன் திட்டம் தீட்டியிருந்தான். இறை அருளால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு குறித்த நேரத்தில் அல்லாஹ் தகவல் அறிவித்திருந்தான். அவனது சதித்திட்டம் வெற்றி பெற முடியாமல் போனது.

நிலைமை இந்த அளவிற்கு மோசமாகி சென்றுவிட்ட பிறகு கஅபிற்கு எதிராக உடன்படிக்கையை முறித்தல், நிலைபெற்றிருந்த அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்தல், போருக்கு தூண்டுதல், குழப்பம் விளைவித்தல், ஆபாசமான விஷயங்களை பேசுதல், கொலை சதித்திட்டம் தீட்டுதல் ஆகிய குற்றங்கள் போதுமான ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டிருந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு வருகை தந்த பிறகு மதீனாவாசிகளுடன் செய்யப்பட்ட உலகளாவிய ஒன்றுபட்ட சமுதாயத்தின் உடன்படிக்கையை செயல்படுத்தினார்கள். அன்னார் மதீனாவின் ஜனநாயக ஆட்சியின் தலைவராகவும், மன்னராகவும் இருந்தார்கள்.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

எனவே அன்னார் கஅப் பின் அஷ்ரஃபின் நடவடிக்கையின் காரணமாக அவன் கொலை செய்யப்பட வேண்டும் என தீர்மானித்தார்கள். மேலும் தனது சில சஹாபாக்களிடம் அவனை கொலை செய்யும்படி கட்டளையிட்டார்கள். சில சூழல்கள் மற்றும் ஹிக்மத்தின் தேட்டத்தின் அடிப்படையில் கஅபை பகிரங்கமாக கொலை செய்ய வேண்டாம் என்றும் வழிகாட்டியிருந்தார்கள்.

மாறாக, சிலர் மட்டும் மௌனமாக சென்று உரிய சந்தர்ப்பத்தில் அவனைக் கொலை செய்யும்படியும் கூறியிருந்தார்கள். இந்த பணியை அன்னார் அவ்ஸ் கோத்திரத்தின் கலப்பற்ற தன்மை கொண்ட ஒரு சஹாபியான முஹம்மது பின் மஸ்லமா அவர்களிடம் ஒப்படைத்தார்கள். மேலும் நீங்கள் என்ன வழிமுறையை மேற்கொண்டாலும் அது தொடர்பாக ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களுடன் நிச்சயமாக ஆலோசனை செய்ய வேண்டும் என்றும் வழியுறுத்தி இருந்தார்கள்.

எனவே முஹம்மது பின் மஸ்லமா அவர்கள் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களின் ஆலோசனைக்கேற்ப அபூ நாயிலா மற்றும் இரண்டு மூன்று ஏனைய சஹாபாக்களையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டார்கள். மேலும் கஅபை கொலை செய்யும் அந்த திட்டத்தை செயல்படுத்தினார்கள்.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று அவனைக் கொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நுட்பமான வழிமுறைகளையும், கொலை சம்பவம் பற்றிய விவரங்களையும் சில சஹாபாக்களின் குறிப்பில் ஏற்கனவே எடுத்துக் கூறிவிட்டேன்.

(குத்பா ஜுமுஆ 7 டிசம்பர் 2018 அல்ஃபஸல் இன்டர்நேஷனல் 20 டிசம்பர் 2018 மற்றும் 7 பிப்ரவரி 2020 அல்ஃபஸல் இன்டர்நேஷனல் 28 பிப்ரவரி 2020)

ஆக எவ்வாறிருப்பினும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஹிக்மத்தின் அடிப்படையில் இரவு நேரத்தில் அவன் வீட்டை விட்டு வெளியே அழைத்து வரப்பட்டு கொலை செய்யப்பட்டான். அவன் கொலை செய்யப்பட்ட செய்தி நகரத்தில் பரவியதும் ஒரு பெரும் பரபரப்பு தொற்றிக் கொண்டது. யூதர்கள் மிகவும் சிணம் கொண்டிருந்தனர். மேலும் இரண்டாம் நாள் காலையில் யூதர்களின் குழு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திக்க வந்தது. மேலும் எங்களது தலைவர் கஅப் பின் அஷ்ரஃப் இவ்வாறு கொலை செய்யப்பட்டு விட்டார் என்றும் முறையிட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதர்களின் கூற்றை கேட்ட பிறகு இவ்வாறு கூறினார்கள்: கஅப் எத்தகைய குற்றங்களை இழைத்திருக்கின்றான் என்பது உங்களுக்குத் தெரியாதா? கொலை செய்யப்பட்டிருப்பது உண்மைதான். ஆயினும் அவனது குற்றங்களுக்குரிய தண்டனையே அவனுக்கு கிடைத்துள்ளது.

பின்னர் அன்னார் சுருக்கமாக கஅபின் உடன்படிக்கையை முறித்தல், போருக்கு தூண்டுதுல், குழப்பம் விளைவித்தல், ஆபாசமான விஷயங்களை பேசுதல், கொலை சதியில் ஈடுபடுதல் போன்ற குற்றங்களை நினைவூட்டினார்கள். அதனைக் கேட்ட அவர்கள் அஞ்சி அமைதியாகி விட்டார்கள். அவன் இந்த குற்றத்தை செய்து கொண்டிருந்தான் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களிடம் கூறினார்கள்: குறைந்தபட்சம் இனியாவது நீங்கள் அமைதியுடனும், ஒத்துழைப்புடனும் இருக்க வேண்டும். பகைமை மற்றும் குழப்பத்தின் விதையை விதைக்காதீர்கள்.

எனவே யூதர்களின் ஒப்புதலுடன் எதிர்காலத்திற்காக ஒரு புதிய ஒப்பந்தம் போடப்பட்டது. யூதர்கள் முஸ்லிம்களுடன் அமைதியாகவும் பாதுகாப்புடனும் வசித்து வருவதாகவும், குழப்பத்திற்கான வழிமுறைகளிலிருந்து விலகி இருப்பதாகவும் புதிதாக உடன்படிக்கை போடப்பட்டது. இந்த புதிய உடன்படிக்கை எழுதப்பட்ட பிறகு யூதர்கள் ஒருபோதும் கஅப் பின் அஷ்ரஃபின் கொலை பற்றி முஸ்லிம்கள் மீது பழி சுமத்தியதாக வரலாற்றில் எந்த இடத்திலும் குறிப்பு இடம் பெறவில்லை. ஏனென்றால் கஅப் தனக்கு தகுதியான குற்றத்தை பெற்றிருந்தான் என்பதை அவர்களின் உள்ளம் உணர்ந்திருந்தது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 467–471)

அவனுக்கு வழங்கப்பட்ட தண்டனையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நாங்கள் வழங்கவில்லை என்று கூறி மறுக்கவில்லை. மாறாக, அவனது குற்றங்களை பட்டியலிட்டார்கள். அது அன்னாரின் தீர்ப்பாக இருந்தது. அன்னார் அரசாங்கத்தின் அதிபராக இருந்தார்கள். மேலும் மதீனாவின் கோத்திரத்தின் தலைவராகவும் முஸ்லிமாகவும் இருந்த ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) போன்றோரின் ஆலோசனையும் அந்த தீர்ப்பில் இடம் பெற்றிருந்தது.

யூத கோத்திரமான பனூ நஸீர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஒரு பாறையை விழச் செய்து ஏமாற்றி கொலை செய்ய திட்டம் தீட்டி இருந்தது. அல்லாஹ் வஹீயின் மூலமாக அந்த தகவலை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்கி இருந்தான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களுடன் அந்த கோத்திரத்தை நோக்கி சென்றார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனடினயாக மதீனா திரும்பி வந்து விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த முழு கோத்திரத்தையும் முற்றுகையிடுமாறு கட்டளையிட்டார்கள்.

ரபீவுல் அவ்வல் ஹிஜ்ரி நான்காம் ஆண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தற்காப்பு சிந்தனையுடன் நிர்பந்தத்திற்கு உள்ளாகி பனூ நஸீருக்கு எதிராக போர் தொடுத்தார்கள். அதன் விளைவாக இறுதியில் இந்த கோத்திரம் மதீனாவிலிருந்து நாடு கடத்தப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பனூ நதீருக்கு எதிரான போரில் வெற்றி செல்வம் கிடைத்தது. அப்போது அன்னார் ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் (ரலி) அவர்களை விழித்து, எனக்காக உங்களது சமுதாயத்தை அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சாபித் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! கஸ்ரஜ் கோத்திரத்தையா? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அனைத்து அன்ஸார்களையும் அவர்கள் எந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் கூறுவீராக: அல்லாஹ் நாடுவதன்றி, எனக்காக எந்தத் தீமையையோ, நன்மையையோ செய்ய எனக்கு ஆற்றல் இல்லை. ஒவவொரு சமுதாயத்திற்கும் குறிப்பிட்ட காலம் நியமிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குரிய காலம் வந்து விட்டால், அதிலிருந்து ஒரு நொடிப்பொழுது பிந்தவோ, முந்தவோ முடியாது. (10:50)

A.Basheer Ahmad, Sec.Waqf-e-jadid, Melapalayam

எனவே அவர்கள் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக அழைத்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு முன் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மேலும் அல்லாஹ்வின் புகழையும் மேன்மையையும் எடுத்துரைத்தார்கள். மேலும் முஹாஜிரீன்கள் மீது அன்ஸார்கள் செய்த நன்மைகளை குறிப்பிட்டார்கள். அதாவது அன்ஸார்கள் தமது வீடுகளில் முஹாஜிரீன்களை தங்க வைத்தார்கள். மேலும் அன்ஸார்கள் தங்களை விட முஹாஜிரீன்களுக்கே முன்னுரிமை வழங்கினார்கள் போன்ற விஷயங்களை அன்னார் எடுத்துரைத்தார்கள். மேலும் எவ்வாறெல்லாம் அன்ஸார்கள் முஹாஜிரீன்களுக்கு உதவி செய்துள்ளார்கள் என்பதையும் குறிப்பிட்டார்கள்.

பின்னர் நீங்கள் விரும்பினால் பனூ நதீருக்கு எதிரான போரில் கிடைத்த செல்வத்தை உங்களுக்கும் முஹாஜிரீன்களுக்கும் நான் பங்கிட்டு கொடுத்து விடுகின்றேன். ஆனால் முஹாஜிரீன்கள் வழக்கம்போல் உங்களது வீடுகளிலேயே தங்கியிருப்பார்கள். கிடைத்த செல்வத்தில் பாதி பாதியை பங்கிட்டுக் கொள்ளலாம். ஆனால் எவ்வாறு அவர்கள் இதற்கு முன்னர் உங்களின் வீடுகளில் இருந்தார்களோ அவ்வாறே வசித்து வருவார்கள். மேலும் நீங்கள் எவ்வாறு அவர்களுக்கு உதவி செய்து வந்தீர்களோ அவ்வாறே உதவி செய்ய வேண்டும். ஆனால் மற்றொரு வழி இருக்கின்றது. அது என்னவென்றால், நீங்கள் விரும்பினால் இந்த செல்வத்தை நான் முஹாஜிரீன்களுக்கு மத்தியில் பங்கிட்டு கொடுத்து விடுகின்றேன்.

மேலும் அன்ஸார்களுக்கு எதுவும் கொடுக்க மாட்டேன். கிடைத்த அனைத்து செல்வத்தையும் அன்ஸார்களுக்கே பங்கிட்டு கொடுத்து விடுவேன். அந்நிலையில் அவர்கள் உங்களது வீடுகளிலிருந்து வெளியேறி விடுவார்கள். பின்னர் அவர்கள் உங்களது வீடுகளில் தங்கியிருக்க மாட்டார்கள். அவரவர் அவரவரது ஏற்பாட்டை செய்து கொள்வார்கள். ஏனென்றால் அந்நிலையில் எல்லோருக்கும் செல்வம் கிடைத்திருக்கும். அப்போது ஹஸ்ரத் சஅத் பி உபாதா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) ஆகியோர் தங்களுக்குள் பேசி ஆலோசனை செய்தார்கள். மேலும் அவர்கள் இருவரும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நீங்கள் இந்த செல்வத்தை முஹாஜிரீன்களுக்கு பங்கிட்டு கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள்.

மேலும் அவர்கள், யார் எவ்வாறு இதற்கு முன்பு வீடுகளில் தங்கி வருகின்றார்களோ அவ்வாறே அவர்கள் தங்கி வர வேண்டும். சகோதரத்துவ பந்தத்திற்கான எந்த தொடர் நிலைநாட்டப்பட்டிருந்ததோ அந்த தொடர் நிலைபெற்றிருக்க வேண்டும். செல்வத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு அவர்கள் எங்களது வீடுகளிலிருந்து வெளியேறுவதை நாங்கள் விரும்பவில்லை என்றும் கூறினார்கள்.

அதற்கு அன்ஸார்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் திருப்தி கொள்கின்றோம். நாங்கள் உங்களுக்கு தலைவணங்கி இருக்கின்றோம். எங்களுக்கு எந்த முறையீடும் இல்லை. இவ்வாறு அவர்கள் கூறிய பிறகு முழு செல்வமும் முஹாஜிரீன்களுக்கு பங்கிட்டு கொடுக்கப்பட்டது.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வே! அன்ஸார்கள் மீது கருணை காட்டுவாயாக. மேலும் அன்ஸார்களின் பிள்ளைகளின் மீதும் கருணை காட்டுவாயாக.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செல்வத்தை முஹாஜிரீன்களுக்கு பங்கிட்டு கொடுத்து விட்டார்கள். மேலும் அன்ஸார்களில் ஏழையாகவும், தேவையுடையவர்களாகவும் இருந்த சஹல் பின் ஹனீஃப் மற்றும் அபூ தஜ்ஜானா ஆகிய இருவர்களைத் தவிர வேறு எந்த அன்ஸாருக்கும் அந்த செல்வத்திலிருந்து எதுவும் கொடுக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களுக்கு யூதர்களின் வாளான அபூ ஹகீக் என்ற வாளை கொடுத்தார்கள். யூதர்களுக்கு மத்தியில் அந்த வாள் மிகவும் புகழ்பெற்றதாக இருந்தது.

(சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 4 பக்கம் 325 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இஃப்க் சம்பவம் நிகழ்ந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மீது பழிசுமத்தப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு மிகுந்த வேதனையை கடக்க நேரிட்டது. நயவஞ்சகர்களின் தவறான அந்த செயலை சில காலம் கழித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களுக்கு முன்னால் எடுத்துரைத்தார்கள். அப்போதும் கூட ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள் தன்னலமற்ற அர்ப்பணிப்பு உணர்வை வெளிப்படுத்தி இருந்தார்கள்.

இந்த சம்பவத்தை மிகவும் விரிவாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். அதனை நான் ஹஸ்ரத் முஸ்தாஹ் என்ற சஹாபியின் நற்குறிப்பில் இதற்கு முன்பு விரிவாக எடுத்துரைத்து விட்டேன். இருந்தபோதிலும் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்களுடன் தொடர்புடைய பகுதியை மட்டும் இங்கு எடுத்துரைத்து விடுகின்றேன்.

நான் கூறியதுபோன்று ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது இல்லத்தை விட்டு வெளியே வந்து சஹாபாக்களை ஒன்று கூட்டினார்கள். மேலும் எனக்கு துன்பம் வழங்கிய அந்த நபரிடமிருந்து என்னை யார் பாதுகாப்பார்? என்று அன்னார் கேட்டார்கள். அன்னார் அப்துல்லாஹ் பின் அபீ சுலூலைப் பற்றியே குறிப்பிட்டார்கள்.

அப்போது அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அந்த நபர் எம்மை சார்ந்தவராக இருந்தால் நான் அவனை கொலை செய்ய ஆயத்தமாக இருக்கின்றேன். ஒருவேளை அவன் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் நான் அவனைக் கொலை செய்ய தயாராக இருக்கின்றேன்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 268,270)

அகழ் போரின்போது பனூ நதீர் கோத்திரத்தின் தலைவரை பனூ குரைலாவின் தலைவரான கஅப் பின் அஷ்ரஃபிடன் அபூ சுஃப்யான் அனுப்பி வைத்தான். மேலும் முஸ்லிம்களுடன் செய்த உடன்படிக்கையை முறிக்கும்படியும் கூறினான். ஆனால் அதற்கு அவர் சம்மதிக்கவில்லை. ஆயினும் அவர்களுக்கு பேராசை காட்டி முஸ்லிம்களின் அழிவைப் பற்றி உறுதியளித்து முஸ்லிம்களுடன் செய்த உடன்படிக்கையின்படி செயல்படாமல் இருக்க அவர்களை சம்மதிக்க வைத்து விட்டான். இன்னும் சொல்லப்போனால், மக்கத்து

**திருக்குர்ஆனிலிருந்து...**

ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு தூதர் உண்டு. எனவே அவர்களின் தூதர் வரும்போது அவர்களுக்கிடையே நேர்மையுடன் தீர்ப்பு வழங்கப்படுகின்றது. மேலும் அவர்களுக்கு எந்த அநீதியும் இழைக்கப்படுவதில்லை. (10:48)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

காஃபிர்களுக்கு உதவியாளர்களாக ஆகிவிடுவதற்கும் அவர்களை சம்மதிக்க வைத்து விட்டான்.

இந்த சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு சீரத் காத்துமன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பனூ குரைலாவின் அபாயகரமான நம்பிக்கை துரோகத்தைப் பற்றி தெரிய வந்தது. அப்போது அவர்கள் முதலில் இரண்டு மூன்று முறை இரகசியமாக சுபைர் பின் அல் அவாம் அவர்களை நிலைமைகளை அறிந்து வர அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு முறையாக அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவர்களான ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்களையும் மேலும் தாக்கம் கொண்ட ஏனைய சில சஹாபாக்களையும் ஒரு குழுவாக பனூ குரைலா கோத்திரத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். மேலும் ஏதாவது அபாயகரமான செய்தி இருந்தால் திரும்பி வந்து அதனை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டாம். மாறாக, சைகையாக கூற வேண்டும் என்று மக்களுக்கு பதற்றம் ஏற்பட்டுவிடாமல் இருப்பதற்காக வழியுறுத்திக் கூறியிருந்தார்கள்.

இந்த குழுவினர் பனூ குரைலாவின் இருப்பிடத்தை அடைந்தனர். மேலும் அவர்களின் தலைவரான கஅப் பின் அஷ்ரஃபிடம் சென்றனர். அந்த கயவன் அவர்களிடம் மிகவும் அகங்காரத்துடன் நடந்து கொண்டான். இரண்டு சஅதுகளும் அதாவது ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) ஆகிய இருவரும் உடன்படிக்கையை பற்றி கூறியவுடன் அவனும் அவனது கோத்திரத்தின் மக்களும் கோபமடைந்தனர். மேலும் செல்லுங்கள். சென்று முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் எங்களுக்குமிடையில் எந்த உடன்படிக்கையும் இல்லை. நாங்கள் எந்த உடன்படிக்கையும் செய்யவில்லை என்று கூறினர். இந்த சொற்களைக் கேட்டு விட்டு சஹாபாக்களின் அந்த குழு எழுந்து திரும்பி வந்து விட்டது. ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து உரிய வகையில் அந்த நிலைமைகளைப் பற்றிய தகவலை அன்னாரிடம் வழங்கினர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் **584,585)**

எவ்வாறிருப்பினும் அவர்களின் இந்த செயல் அந்த நேரத்தில் முஸ்லிம்களுக்கு ஒரு பெரும் அதிர்வாக இருந்தது. நாலாபுறமும் மக்கத்து காஃபிர்கள் மதீனாவை சூழ்ந்திருந்தனர். அதன் காரணமாக இந்த கோத்திரத்திற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் இருந்தது. ஆனால் போர் முடிவடைந்த பிறகு நகரத்திலிருந்து திரும்பி வந்தபோது அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஆன்மீகக் காட்சியில் பனூ குரைலா செய்த நம்பிக்கை துரோகம் மற்றும் கிளர்ச்சிக்கு தண்டனை வழங்கும்படி கூறியிருந்தான். அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கட்டளை கிடைத்தது. அதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ குரைலாவின் கோட்டையை நோக்கி செல்லுமாறும், அஸர் தொழுகையை அங்கேயே நிறைவேற்றுவோம் என்றும் பொது அறிவிப்பு ஒன்றை செய்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை ஒரு குழுவுடன் உடனடியாக முன்னால் செல்லும்படி கூறி அனுப்பி வைத்தார்கள். இந்தப் போரின் விளக்கம் சற்று நீண்டதாகும். அதில் ஹஸ்ரத் சஅத் பின் மஆஸ் (ரலி) அவர்கள் இறுதியில் தீர்ப்பு வழங்குகின்ற விஷயமும் இடம் பெற்றுள்ளது. எனவே தற்போது நேரம் இல்லை. இன்ஷா அல்லாஹ் இதன் விளக்கம் பிறகு எடுத்துரைக்கப்படும்.

## மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வது

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் ஏற்கனவே கூறி வந்திருப்பது போன்றே இறையச்சத்தை மேற்கொள்வதற்கு ஓரளவுக்கு செயற்கைத்தன்மையும் தேவைப்படுகிறது. எனவே தான் (இவ்வேதம்) இறையச்சம் உடையோருக்கு நேர்வழியினை வழங்கக்கூடியது. அவர்கள் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வர் **(2:3–4)** என்று இறைவன் கூறுகின்றான்.

இதில் ஒரு செயற்கைத் தன்மை இருக்கின்றது. வெளிப்படையாக தெரிவிப்பவற்றிற்கு எதிரில் மறைவானவற்றின் மீது ஈமான் கொள்வது ஒருவிதமான செயற்கைத் தன்மையை வேண்டுகின்றது. எனவே, இறையச்சம் உடையவருக்கு ஓரளவு செயற்கையுடன் நடந்து கொள்ள வேண்டியது வருகின்றது. ஏனென்றால், அவர் சாலிஹ் (நல்லடியார்) என்ற தகுதியைப் பெற்று விடும்போது அதற்கு பிறகு மறைவானவை அவருக்கு மறைவானவையாக இருப்பதில்லை. ஏனெனில், சாலிஹின் உள்ளேயிருந்து ஓர் ஆறு திறந்து விடப்படுகின்றது. அது அவரிடமிருந்து வெளியேறி இறைவன் வரை சென்றடைகின்றது. அவர் இறைவனையும் அவனது அன்பையும் தனது கண்களால் காண்கின்றார். இவ்வுலகில் குருடராக இருப்பவர் மறுமையிலும் குருடராகவே இருப்பார். (17:73)

எதுவரை மனிதன் முழுமையான ஒளியை இந்த உலகில் பெற முடியவில்லையோ அப்படிப்பட்ட மனிதன் ஒருபோதும் இறைவனின் முகத்தைப் பார்க்க முடியாது என்பதே இதிலிருந்து தெரிய வருகின்றது. எனவே, இறையச்சமுடையவரின் பணி இதுவே ஆகும். அதாவது, அவர் எப்போதுமே அத்தகைய சுர்மாவை தயார் செய்து கொண்டிருக்க வேண்டும். அதன் மூலமாக ஆன்மீகமான முறையில் (தேவையில்லாமல்) அவரது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடுவது அகன்று விடும். இதிலிருந்தும் தெரிய வருவது என்னவென்றால், இறையச்சமுடையவர் ஆரம்பத்தில் குருடராக இருக்கின்றார். பல்வேறு முயற்சிகள் மற்றும் தன்னை தூய்மைப்படுத்துதல் மூலமாக அந்த ஒளியை அவர் பெற்றுக் கொள்கின்றார். பிறகு அவர் நலமடைந்து சாலிஹ் ஆக ஆனதும் பிறகு மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வது இருக்காது. செயற்கைத் தன்மையும் கூட முடிந்து விடும்.

உதாரணமாக, ஹஸ்ரத் ரஸூலே அக்ரம் (ஸல்) அவர்களுக்கு இந்த கண்கள் மூலமாக இதே உலகில் சுவர்க்கம் மற்றும் நரகம் போன்ற அனைத்துமே வெளிப்படையாகக் காட்டப்பட்டுள்ளது. எதனை இறையச்சமுடைய ஒருவருக்கு மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் ஏற்றுக் கொள்ள வேண்டியது வருகின்றதோ அவை அனைத்துமே பெருமானார் (ஸல்) அவர்களுக்கு காட்டப்பட்டு விட்டது. இறையச்சமுடையவர் குருடராக இருந்தாலும், செயற்கையாக இருக்கின்ற துன்பத்தில் இருந்தாலும் ஸாலிஹாக இருக்கின்ற ஒருவர் அமைதியின் வீட்டில் வந்து விடுகின்றார். அவரது ஆன்மா நிம்மதியடைந்த ஆன்மாவாக ஆகிவிடுகின்றது.

இறையச்சமுடையவர் தன்னகத்தே மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்ளும் தன்மையை வைத்துள்ளார். அவர் கண்ணை மூடியவாறு அவற்றை கடைபிடித்தவாறு செல்கின்றார். அவருக்கு அதைப் பற்றி தெரியாது. ஒவ்வொரு விஷயத்திலும் அவருக்கு மறைவானவற்றின் மீதுள்ள நம்பிக்கை தான் இருக்கின்றது. இதுவே அவரின் உண்மையாகும். இந்த உண்மைக்கு எதிரில் இறைவனின் வாக்குறுதியானது அவர் வெற்றி பெற்று விடுவார் (2:4) என்பதாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 17–18; 2003 ஆம் ஆண்டு பதிப்பு)

(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)

அடிஷ்னல் இஷாஅத் செயலர் அவர்கள் தமது அறிக்கையை சமர்ப்பித்தவாறு கூறினார்கள்: நான் இஷாஅத் துறையின் உறுப்பினர் ஆவேன். தற்போது தொஹ்ஃபா கைஸரியா புத்தகத்தை மொழியாக்கம் செய்து கொண்டிருக்கின்றேன்.

♦ முஹாஸிப் செயலர் ஹுஸூர் அவர்களிடம், அனைத்து கணக்குகளையும் நான் பார்க்கின்றேன். செகரட்டரி மால் சாஹிப் அவர்களுடன் இணைந்து சரி பார்ப்பேன். பிறகு நாங்கள் இருவரும் இணைந்து Cross Check செய்வோம்.

♦ ஹுஸூர் அவர்களிடம், இங்குள்ளவர்கள் ஷோஷல் பெறுகின்றனர். மேலும் வேலை செய்வதில்லை. மேலும் சிலரோ ஷோஷல் பெறுவது மட்டுமல்லாமல் மறைமுகமாக வேலையும் செய்கின்றனர் என்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நான் எனது குத்பாக்களில் ஷோஷல் பெற வேண்டாம். வேலை செய்யுங்கள் என்று கூறி இருக்கின்றேன்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எவர்கள் பலவீனமானவர்களாக இருக்கின்றார்களோ அவர்களுக்கு புரிய வைத்துக் கொண்டிருப்பது தர்பிய்யத் செயலர் மற்றும் முபல்லிக்களின் பணியாகும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: சிலர் ஷோஷல் பெறுவதற்கு உரிமை படைத்தவர்களாக இருக்கின்றனர். ஆனால் அவர்களே அதனை வாங்குவதில்லை.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எவர்கள் ஷோஷல் பெறுகின்றார்களோ, வேலை செய்வதில்லையோ, மேலும் வரியை செலுத்துவதில்லையோ அவர்களிடம் உங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள் என்று இரண்டு முறை புரிய வையுங்கள். பிறகும் அவர்கள் சீர்திருந்தவில்லை என்றால் பிறகு சட்டத்திடம் தெரிவியுங்கள். எவ்வித அனுதாபத்தையும் வெளிப்படுத்த வேண்டியதில்லை. சட்டத்தை பேணி நடங்கள்.

♦ ஹுஸூர் அவர்கள் உமூரே ஆமா செயலர் அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கினார்கள்: புதிதாக வரக்கூடியவர்களுக்கு எவ்வாறு வேலை வாங்கித் தருவது. அவர்களுக்கு எவ்வாறு உதவு செய்ய முடியும்? அவர்களுக்கு ஏதேனும் வேலை வாங்கிக் கொடுக்க முடியுமா? என்பது தொடர்பாக உமூரே ஆமா மற்றும் சனத் வ திஜாரத் துறை இணைந்து பணி செய்யுங்கள். மக்களின் நிலைமை மேம்படுதற்காக அவர்கள் வேலைகளை பெறுவதற்கு வழிகாட்டலை வழங்குவதும் உமூரே ஆமாவின் பணியாகும்.

ஜமாத்தாக தொழுவது தொடர்பாக ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தேசிய செயற்குழுவின் உறுப்பினர்கள் ஃபஜ்ர் மற்றும் இஷா தொழுகைகளை பள்ளிவாசல், சென்டருக்கு சென்று நிறைவேற்ற வேண்டும். எந்த உறுப்பினர்கள் வருவதில்லையோ மூன்று மாதத்திற்குப் பிறகு அவர்களது வருகைப் பற்றி அறிக்கை தரவும் தேசிய செயற்குழுவின் உறுப்பினர்களின் வருகைப் பதிவு தொடர்பான அறிக்கையை சத்ர் ஜமாஅத், அமீர் சாஹிபிடம் கொடுக்கவும்.

♦ தப்லீக் செயலர் கூறினார்கள்: தப்லீக் வகைக்காக குறைவான பட்ஜெட்டே வழங்கப்படுகின்றது. இதன் காரணமாக நிகழ்ச்சிகள் நடத்த முடியாது.

அதற்கு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தப்லீக் வகைக்காக போதுமான பட்ஜெட் வழங்கப்பட வேண்டும். இஸ்லாத்தை பரப்புவதற்காகவே சந்தா கொடுக்கப்படுகின்றது.

ஹுஸூர் அவர்கள் ஹாலந்து ஜமாத்தின் பட்ஜெட் மற்றும் பல்வேறு வகைகளை விரிவாக ஆய்வு செய்தார்கள். மேலும் கூறினார்கள்: மொத்த பட்ஜெட்டில் 10 சதவிகிதம் தப்லீக்கிற்கு கொடுங்கள்.

♦ ஹுஸூர் அவர்கள் தப்லீக் செயலிடம் கூறினார்கள்: முதலில் நீங்கள் திட்டம் தீட்டுங்கள். உங்களது அமீர் சாஹிப் அவர்களுக்கு தப்லீக் திட்டத்தை தயார் செய்து கொடுங்கள். பிறகு அதனை தொடர்ச்சியாக Follow Up செய்யுங்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உங்களது ஷூராவை மே மாதத்தில் நடத்துங்கள். மேலும் அனைத்து துறைகளும் தத்தமது பட்ஜெட்டை முதலிலேயே அனுப்பி வையுங்கள்.

ஹுஸூர் அவர்களுடனான ஹாலந்தின் தேசிய செயற்குழு மீட்டிங் 12.15 வரை நீடித்தது. இறுதியில் செயற்குழு உறுப்பினர்கள் ஹுஸூர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ளும் நற்பேற்றை பெற்றார்கள். (உருது பத்ர் 14 நவம்பர் 2019 – தொடரும்...)

---

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பலகீனமான சகோதரர்களின் சுமையை சுமக்க வேண்டும். செயல் அளவிலான மற்றும் ஈமானிலுள்ள பலகீனங்களை அகற்றுவதற்கும், பொருளாதார பலகீனங்களை அகற்றுவதற்கும் அவர்களுடன் இணைந்து நீங்கள் செயல்படுங்கள். உடல் அளவிலான பலகீனங்கள் இருந்தால் அதற்கான சிகிச்சையை நீங்கள் செய்யுங்கள். முலகீனமாக இருப்பவர்களுக்கு ஆற்றல் கிடைத்தவர்கள் ஆதரவு வழங்காத வரை எந்தவொரு ஜமாஅத்தும் ஜமாஅத்தாக இருக்க முடியாது. அவர்களின் குறைகளை திரையிட்டு மறைப்பதே இதற்கான வழியாக இருக்கின்றது.

புதிய முஸ்லிம்களின் பலகீனங்களைக் கண்டு கோபப்படாதீர்கள். எனென்றால் நீங்களும் அவர்களைப் போன்றே பலகீனமானவர்களாக இருந்தீர்கள் என்ற போதனையே சஹாபாக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறே பெரியவராக இருப்பவர் சிறியவர்களாக இருப்பவர்களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்பது அவசியமானதாகும். அன்புடனும் மென்மையுடனும் அவர்களுடன் நடந்து கொள்ள வேண்டும்.

பாருங்கள் ! பரஸ்பரம் உங்களுக்கிடையில் ஒருவர் மற்றவரை தின்னுகின்ற ஜமாஅத் ஜமாஅத்தாக இருக்க முடியாது. நான்கு பேர் ஒன்றாக சேர்ந்து அமரும் போது ஒருவர் தனது ஏழை சகோதரரைப் பற்றி புகார் கூறுகின்றார். அவரது குற்றங் குறைகளை எடுத்துக் கூறுகின்றார் என்றால் ஏழைகளுடன் இழிவாக நடந்து கொள்கின்றார் என்றால் அவர்களை இழிவாகவும், வெறுப்புடனும் பார்க்கின்றார் என்றால் அவ்வாறு ஒருபோதும் நடந்து கொள்ளக் கூடாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 263 – 2003 ஆம் ஆண்டு பதிப்பு)

## திருக்குர்ஆனிலிருந்து...

அநீதி இழைத்துக் கொண்ட ஒவ்வொருவரும் பூமியிலுள்ளவையெல்லாம் பெற்றிருந்தாலும் அவர் அதனை நிச்சயமாகத் தனக்கு ஈடாக் கொடுத்திருப்பார். அவர்கள் தண்டனையைக் காணும்போது (தங்கள்) வெட்கத்தை மறைப்பார்கள். அவர்களுக்கிடையே நேர்மையுடன் தீர்ப்பு வழங்கப்படும். மேலும் அவர்களுக்கு (எந்த) அநீதியும் இழைக்கப்படமாட்டாது. (10:55)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 06 Aug 2020 Issue No. 32

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

♦ ஹுஸூர் அவர்கள் கேட்டறிந்ததற்கிணங்க தேசிய வக்ஃபே நவ் செயலர் தனது அறிக்கையை எடுத்துக் கூறியவாறு இவ்வாறு கூறினார்கள்:

வக்ஃபே நவ் துறையின் கீழ் தற்போது 123 ஆண்களும், 92 பெண்களும் இருக்கின்றனர். மேலும் 13 நபர்கள் பல்கலைக்கழகத்தில் பயின்று வருகின்றனர். இவர்களில் 8 பெண் பிள்ளைகளும், 5 ஆண் பிள்ளைகளும் அடங்குவர்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பெண் பிள்ளைகள் பல்கலைக்கழகத்தில் அதிகமாக இருக்கின்றார்கள். ஆண் பிள்ளைகளும் அதிகமாக முன்னுக்கு வர வேண்டும். எவர்கள் மருத்துவராகவோ, ஆசிரியராகவோ அல்லது இன்ஜினியராகவோ ஆகவில்லையோ மேலும் ஜாமிஆவிற்கும் செல்லவில்லையோ அவர்கள் ஞருடெடைஉ ஞுநசளஉைநள ற்கு செல்ல வேண்டும் என்று நான் வழிகாட்டல் வழங்கியுள்ளேன். இதன் பக்கம் முயற்சி செய்ய வேண்டும்.

♦ தேசிய சொத்து துறை செயலரிடம் ஹுஸூர் அவர்கள் அவரது பணி தொடர்பாக கேட்டார்கள். அதற்கு அவர்கள், சூரளேயீநநவ ல் ஹனீஃப் சாஹிப் அவர்களுடன் கட்டுமானப் பணியை செய்துள்ளேன் என்றும், கல்வியில் பொறியியலில் டிக்ரி பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

♦ தேசிய ரிஷ்தா நாதா செயலர் தமது அறிக்கையை எடுத்துக் கூறியவாறு கூறினார்கள்: 12 வரன்கள் முடிவு செய்யப்பட்டுள்ளது. 8,10 நிலுவையில் உள்ளது. இரு சாராரின் அட்டவணை ஏறக்குறைய சமமே ஆகும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அட்டவணை சமமாகவே இருக்கின்றதென்றால் பிறகு விரைவாக சேர்த்து வையுங்கள்.

♦ Auditor சாஹிப் அவர்கள் தற்போதுதான் பணியை ஆரம்பம் செய்துளளதாக கூறினார்கள்.

♦ மண்டல அமீர்மார்களும் இந்த மீட்டிங்கில் கலந்து கொண்டிருந்தனர். ஒரு மண்டல அமீரான பிரேமன் பர்க் சாஹிப் அவர்களிடம் ஹுஸூர் அவர்கள், அமீர் சாஹிப் அவர்களுக்கு உங்களுக்கு முக்கியமான பணிகளை ஏதும் கொடுப்பார்களா? அல்லது நீங்கள் பொதுவாக உங்களது மண்டலத்தின் ஜமாஅத்துகளை பார்ப்பீர்களா? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள், தற்போது ஒரு பள்ளிவாசல் கட்டுவதற்கான திட்டம் உள்ளது. நாங்கள் சாவுத்தில் பள்ளிவாசலை கட்ட விரும்புகின்றோம் என்று கூறினார். அதற்கு ஹுஸூர் அவர்கள், பள்ளிவாசலை கட்டுங்கள். யார் தடுத்தார்கள்? என்று கேட்டார்கள்.

ஹுஸூர் அவர்களிடம், அந்த மண்டலத்தில் முரப்பி கிடையாது. தங்குவதற்கும் கூட பிரச்சனை இருக்கின்றது என்று கூறப்பட்டது.

அதற்கு ஹுஸூர் அவர்கள், ஜமாஅத் ஏழை இல்லை என்றால் பிறகு பள்ளிவாசலை கட்டுங்கள். வீடு எடுங்கள். தொழுகை சென்டரை அமையுங்கள். முரப்பிக்கு தங்குமிடத்தை கொடுங்கள்.

ஹுஸூர் அவர்கள் மேலும் கூறினார்கள்: நீங்கள் உங்களது உறுப்பினர்களை ஊக்கப்படுத்துங்கள். மேலும் இதன் பக்கம் கவனமூட்டுங்கள்.

♦ தேசிய வஸிய்யத் செயலர் தனது அறிக்கையை எடுத்துக் கூறியவாறு கூறினார்கள்: மொத்தம் 406 நபர்கள் மூஸி ஆவர். இதில் பெரும்பான்மையினர் வீட்டிலுள்ள பெண்களும், மாணவர்களும் ஆவார்கள். அதற்கு ஹுஸூர் அவர்கள், உண்மையான விஷயம் என்னவென்றால், சம்பாதிக்கக்கூடியவர்களில் எத்தனை நபர்கள் மூஸி ஆவார்கள் என்பதேயாகும். இந்த (எண்ணிக்கை) அதிகமாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

♦ செகரட்டரி மால் சாஹிப் அவர்கள் கூறினார்கள்: 167 நபர்கள் சம்பாதிக்கக் கூடியர்களாவர். இதில் 92 அன்ஸார், 58 குத்தாம் மற்றும் 17 லஜ்னாக்கள் அடங்குவர்.

♦ தேசிய வஸிய்யத் செயலர் கூறினார்கள்: சம்பாதிக்கக்கூடியவர்களில் 41 சதவீத நபர்கள் மூஸி ஆவார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: சம்பாதிக்கக்கூடிய 167 நபர்களில் 84,85 நபர்கள் மூஸி (வஸிய்யத் செய்தவர்களாக) இருக்க வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் இங்குள்ள மாதாந்திர வருமானம், ஒரு மணி நேரத்திற்கு எவ்வளவு ஊதியம் கிடைக்கின்றது போன்றவை தொடர்பாக விரிவாக ஆய்வு செய்தார்கள்.

செகரட்டரி சாஹிப் கூறினார்கள்: ஒரு மணி நேரத்திற்கு கிடைக்கின்ற ஊதியம் வயதைப் பொருத்து மாறுபடுகின்றது. 19,20 வயதுள்ள இளைஞர்கள் இருக்கின்றனர். அவர்கள் பணி செய்கின்றனர். சில நேரங்களில் மாணவர்கள் விடுமுறைகளில் பணி செய்கின்றனர். அவர்களது ஊதியம் குறைவாக இருக்கின்றது. மேலும் எவர்களது வயது ஏறக்குறைய 30 ஆக இருக்கின்றதோ அவர்களுக்கு ஒரு மணி நேரத்திற்கான ஊதியம் அதிகமாகும். இந்த அடிப்படையில் பணி செய்யக்கூடியவர்களின் மாதாந்திர வருமானமும் மாறுபட்டதாக இருக்கின்றது.

♦ ஹுஸூர் அவர்கள் செகரட்டரி மால் சாஹிப் அவர்களிடம், சம்பாதிக்கக்கூடிய 167 நபர்கள் சந்தா கொடுக்கின்றார்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், அனைவரும் கொடுக்கின்றனர். ஆனால் அவர்களில் 70 சதவீதம் பேர் வருமானத்திற்கேற்ப சந்தா கொடுப்பவர்களாவர். சந்தா செலுத்தக்கூடியவர்களின் மொத்த எண்ணிக்கை 608 ஆகும்.

♦ ஆகூஹ வின் தேசிய செயலரிடம் ஹுஸூர் அவர்கள், ஏதாவது நிகழ்ச்சிகளை தயார் செய்வீர்களா? என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள், நிகழ்ச்சிகளை தயார் செய்கின்றோம். அமீர் சாஹிப் அவர்கள் பணியை ஒப்படைத்துள்ளார்கள். நாங்கள் உள்ளூர் அளவில் நிகழ்ச்சிகளை தயார் செய்கின்றோம்.

*(தொடர்ச்சி 11 வது பக்கம்…)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad